செய்தி வெளியீடு எண்:316/2018

நாள்: 01.06.2018

**வேலூர் மாவட்டத்தில் 2018-19 ஆம் கல்வியாண்டில் 2236 அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 4,18,800 மாணவ மாணவிகளுக்கு விலையில்லா பாட புத்தகங்கள் மற்றும் நோட்டு புத்தகங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்!**

வேலூர் ஈ.வெ.ரா நாகம்மையார் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 2018-19 ஆம் கல்வியாண்டில் ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை யிலும் மாணவ மாணவிகளுக்கு விலையில்லா பாடப்புத்தகங்கள் மற்றும் நோட்டு புத்தகங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கி பேசியதாவது:-

வேலூர் மாவட்டத்தில் 2018-19ஆம் கல்வியாண்டில் மாவட்டத்திலுள்ள 2236 அரசு மற்றும் அரசுநிதியுதவிபெறும் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல். பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் 4,18,800 மாணவ மாணவியருக்கு பள்ளி திறக்கும் நாளான இன்று (01.06.2018) விலையில்லா பாடநூல் மற்றும் நோட்டுப்புத்தகங்கள் அந்தந்த பள்ளிகளில் வழங்கப்படவுள்ளது. அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகள் புரிதல் திறன் குறைவாக உள்ளது என ஆய்வில் தெரியவந்துள்ளது. எனவே, இந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய பாடத்திட்டமானது மாணவ மாணவிகளின் அறிவுத் திறனை வளர்க்கும் விதத்தில் அமையப்பெற்றுள்ளது. இந்த கல்வியாண்டு முதல் 1, 6, 9 மற்றும் 11 ஆம் வகுப்புகளுக்கு பாடத்திட்டம் மாற்றம் செய்யப்பட்டு புதிய பாடத்திட்ட புத்தகம் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்படுகிறது. எனவேதான் பாடத்திட்டத்தில் கேள்விகளுக்கு பதில் அளிக்கும் முறை மட்டுமின்றி தீர்வு காணும் முறையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆசிரியர்களின் கற்பிக்கும் திறனை அதிகரிக்க அவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. மாணவர்களின் நினைவுத் திறன் அதிகமாக இருக்க வேண்டும். அதாவது மாணவர்கள் படிக்கும்போது கவனத்தை சிதறவிடக்கூடாது. படிப்பில் மட்டும் கவனம் செலுத்தினால் நினைவுத் திறன் அதிகரிக்கும். அறிவியல் போன்ற பாடத்திட்டங்களில் மாணவ மாணவிகள் கோட்பாடுகளை பற்றி அறிந்து பயிலவும், தமிழ்மொழி பாடத்தில் ஆளுமை திறமையும், ஆங்கிய மொழி பாடத்தில் பேச்சுத் திறனை வளர்க்கும் வகையில் புதிய பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

மாணவ மாணவிகள் வாழ்வில் உயர்ந்த நிலை அடையவேண்டும் என்ற குறிக்கோளோடு படிப்பில் மட்டுமே கவனம் செலுத்தினால் நிச்சயம் வாழ்வில் வெற்றியடையலாம். நம்முடைய புதிய பாடத்திட்டம் சேதிய அளவில் நடைபெறும் போட்டி தேர்வுகளில் மாணவ மாணவிகள் கலந்துக்கொள்ளும் வகையில் சிறப்பாக வல்லுநர் குழுவால் உருவாக்கப்பட்டுள்ளது. வேலூர் மாவட்டத்தில் பயிலும் மாணவ மாணவிகள் நல்ல முறையில் பயின்று மாநில அளவில் தேர்ச்சி விகிதத்தில் மாவட்டத்தை முதல்நிலைக்கு கொண்டுவர அனைத்து மாணவ மாணவிகளுக்கு என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் முதன்மை கல்வி அலுவலர் திரு.மார்ஸ், மாவட்ட கல்வி அலுவலர் திருமதி.அமுதா, முதன்மை கல்வி அலுவலர் அவர்களின் நேர்முக உதவியாளர் திரு.ராஜன், வேலூர் வட்டாட்சியர் திரு.பாலாஜி, பள்ளியின் தலைமை ஆசிரியர் (பொ) திரு.பற்குணதேவன், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகள் கலந்துக் கொண்டனர்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர்-9.